**சுருக்கம்**

தொலைபேசி – கைபேசி – மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் – உயர் அலுவலர்களது கைப்பேசி அழைப்புக் கட்டணம் உயர்த்தி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ட்டி.1) துறை**

அரசாணை (நிலை) எண்.336

நாள்:23.10. 2014
ஜய, ஐப்பசி 06 ,
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்கவும் :

1. அரசு ஆணை (நிலை) எண்.188, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல (ஜி)த் துறை, நாள்.16.06.2008.
2. அரசு ஆணை (நிலை) எண்.322, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல (ஜி)த் துறை, நாள்.29.09.2009
3. அரசு ஆணை (நிலை) எண்.198, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல (ஜி)த் துறை, நாள்.08.08.2011.
4. அரசுக் கடித எண்.37261/2007–1, பொது (தொ.பே.1)த்துறை, நாள்.26.07.2007.
5. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கடிதம் ந.க.எண். 52626/கபி2/3/2008, நாள்.25.03.2014.

*****

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2008–2009–ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ், இயக்குநர், 6 கூடுதல் இயக்குநர்கள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனையில் உள்ள அனைத்து நலப்பணிகள் இணை இயக்குநர்களுக்கும் (கைபேசிகள்)(Cell phone) வாங்குவதற்கு ரூ.5,000/– என்ற அளவிலும், அவற்றிற்குண்டான சிம் கார்டுகளை வாங்குவதற்கு ரூ.1,000/– என்ற அளவிலும் அனுமதிக்கப்பட்டு ஆணைகள் வழங்கப்பட்டது.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்குறிப்பிட்டுள்ள கைபேசிகளுக்கு ஒவ்வொரு மாதமும் டாப் அப் (Top-up) கார்டுகளை வாங்குவதற்கு கீழ்கண்ட விவரப்படி உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டு, அதன்படி செலவினம் அனுமதிக்கப்பட்டு வருகிறது:-

| பதவியின் பெயர் | கைபேசி எண்ணிக்கை | மாத உச்சவரம்பு | மொத்தம் (ஒரு மாதத்திற்கு) |
|---|---|---|---|
| | | (ரூபாய்) | (ரூபாய்) |
| இயக்குநர் | 1 | 1,000/– | 1,000/– |
| கூடுதல் இயக்குநர் | 6 | 750/– | 4,500/– |
| இணை இயக்குநர் | 29 | 600/– | 17,400/– |
| மொத்தம் | | | 22,900/– |

3. பார்வை மூன்றில் கண்டுள்ள அரசாணையின்படி கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் என இரண்டாக பிரிக்கப்பட்டதால் கோயம்புத்தூர் மாவட்ட இணை இயக்குநர் நலப்பணிகள் அவர்களுக்கும் மற்றும் இவ்வியக்கக இணை இயக்குநர் (மருத்துவம்) மற்றும் (நெஞ்சகம் நோய்) அவர்களுக்கும், நிதி கட்டுப்பாட்டாளர் (முன்பு நிதி ஆலோசகர் மற்றும் தலைமை கணக்கு அலுவலர்) அவர்களுக்கும் கைபேசி வழங்கிட அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு உள்ளது.

4. மேற்படி இயக்குநர், கூடுதல் இயக்குநர்கள், நிதிக் கட்டுப்பாட்டாளர், மற்றும் இவ்வியக்கக கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து இணை இயக்குநர் நலப்பணிகள் ஆகியோரது கைப்பேசிகள் அடிக்கடி பழுது ஏற்படுவதும், அதை மீண்டும் சரிசெய்து உபயோகித்து வருவதாகவும், அவற்றுக்குப் பதிலாக புதிய கைப்பேசிகளை வழங்க ஆணை வழங்குமாறும் அரசைக் கேட்டுக்கொன்டுள்ளார். மேலும் அக்கைப்பேசிகளுக்கான அழைப்புக் கட்டணம் ரூ.1.00–லிருந்து ரூ.1.50 என 50% அதிகரித்துளதாலும், அக்கைப்பேசிகளுக்கு ப்ரிபெய்டு முறையில் தற்பொழுது வழங்கப்படும் தொகையினை அவசரம் மற்றும் அவசியம் கருதியும், இனிவரும் காலங்களில் கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்குமாறு மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அரசை கேட்டுக்கொன்டுள்ளார்.

| வ. எண். | பதவியின் பெயர் | தற்பொழுது பெறப்படும் தொகை | வருங்காலத்திற்கு பெறப்படும் தொகை |
|---|---|---|---|
| 1 | இயக்குநர் | ரூ.1,000/– | ரூ.1,500/– |
| 2 | நிதிக் கட்டுப்பாட்டாளர் | ரூ.600/– | ரூ.1,300/– |
| 3 | கூடுதல் இயக்குநர் | ரூ.750/– | ரூ.1,300/– |
| 4 | அனைத்து இணை இயக்குநர் நலப்பணிகள் | ரூ.600/– | ரூ.1,000/– |

5. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கருத்துருவை கவனமாகப் பரிசீலித்து பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது. மேலே பார்வை 4–ல் படிக்கப்பட்ட அரசுக்கடிதத்தில் அரசு அலுவலர்களுக்கு கைப்பேசி கருவிகள் அரசு கணக்கில் பெற்று வழங்கப்படுவதில்லை என்றும், அவர்கள் தாங்கள் சொந்த கைபேசியினையே அலுவலகப்பணிக்கு பயன்படுத்தி, அதற்கு ஏற்படும் செலிவனத் தொகையை உரிய செலவுச் சீட்டினை சமர்பித்து திரும்பபெறலாம் என்றும், மேலும் துறைத் தலைவர்களுக்கு வழங்கப்படுவதுபோல் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநருக்கு கைப்பேசிக்கான அழைப்புக்கட்டணத்தை மாதம் ரூ.1000/– லிருந்து ரூ.1200/–ஆக உயர்த்தி வழங்கவும், தலைமைச் செயலகத்திலுள்ள இணைக் செயலர்களுக்கு இல்லத்தொலைபேசி மட்டும் வழங்கி, அவற்றிற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.600/– மற்றும் சேவை வரி அனுமதிக்கப்படுவது போல, இந்நேர்வில் அப்பதவிக்கு நிகரான பணியிடங்களில் பணிபுரியும் நிதிக்கட்டுப்பாளர், கூடுதல் இயக்குநர் மற்றும் இணை இயக்குநர்களின் கைப்பேசிக்களுக்கான அழைப்புக் கட்டணமாக தற்போது மாதம் ஒன்றிற்கு ரூ.600/–, ரூ.750/– மற்றும் ரூ.600/– என வழங்கப்பட்டு வருவதைத் தொடர்ந்து வழங்க அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி–5ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை கீழ்க்காணும் கணக்குத்தலைப்புகளில் பற்று வைக்கப்படவேண்டும்:-

2210 மருத்துவமும் பொது சுகாதாரமும் – 01.நகர்ப்பகுதி சுகாதாரப் பணிகள் ஆங்கில முறை மருத்துவம் – 001. நெறிப்படுத்தலும் நிருவாகமும் – I –திட்டத்தில் சேராதது – AA மருத்துவம், ஊரகச் சுகாதாரப் பணிகள் இயக்ககத்தின் தலைமையிடப் பணியாளர்கள் – 05.அலுவலகச் செலவுகள் – 01.தொலைபேசிக் கட்டணங்கள். (த.தொ.கு.2210–01–001–AA 0518)

**மற்றும்**

2210 – மருத்துவமும் பொது சுகாதாரமும் – 01–நகர்ப்பகுதி சுகாதாரப் பணிகள் ஆங்கில முறை மருத்துவம் – 110 – மருத்துவமனைகளும் மருந்தகங்களும் – I – திட்டத்தில் சேராதது – AA – மாவட்ட தலைமையிட மருத்துவமனைகள் – 05 – அலுவலகச் செலவுகள் – 01 – தொலைபேசிக் கட்டணங்கள் (த.தொ.கு.2210–01–110–AA 0517)

7. இந்த ஆணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.52948/நிதி (சுகாதாரம்– 2)2014, நாள் 16.10.2014ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஜெ. ராதாகிருஷ்ணன்**
**அரசு செயலாளர்**

பெறுநர்:
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், இயக்குநர், சென்னை– 600 006.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு) சென்னை–35
நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் அலுவலகம், சென்னை–600 006
மாநில கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை) சென்னை – 18/9
நிதித் (சுகாதாரம்–2)துறை, சென்னை–9
பொது (தொ.பே.2)த்துறை, சென்னை–9
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(டேட்டா செல்) துறை,சென்னை– 9
உபரி கோப்பு / இருப்பு கோப்பு

**(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)**

சு. சந்திரசேகரன்
**பிரிவு அலுவலர்**